<u>பதிவஞ்சல்</u>

கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை - 32 அவர்களின் செயல்முறை ஆணை.

—

பிறப்பிப்பவர் : திரு. செ. ரவிச்சந்திரன், பி.இ., எம்.பி.ஏ.,

செ.மு.ஆ.எண்.19944/ பஅ3 / 2021 நாள். 06.02.2024

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - "பயிற்சிப்பிரிவு" - ஆனைக்கட்டி அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பணிபுரியும் காலத்திலேயே மறைந்த திரு. ப்பி. தமிழ் செல்வன், இளநிலை பயிற்சி அலுவலர் அவர்களின் மனைவி <u>திருமதி. எஸ். மகேஸ்வரி</u> - என்பவருக்கு கருணை அடிப்படையில் **இளநிலை உதவியாளராக** பணி நியமனம் செய்து பணியமர்த்தி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண். 560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 03.08.1977.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 23.01.2020.
3. அரசாணை (நிலை)எண்: 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q) துறை 08.03.2023.
4. ஆனைக்கட்டி அரசு தொழிற் பயிற்சி நிலைய முதல்வரின் கடித எண்.869/01அ/2020, நாள்.08.12.2023.

—

**ஆணை:-**

ஆனைக்கட்டி அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பணிபுரிந்து வந்த திரு. ப்பி.தமிழ் செல்வன், இளநிலை பயிற்சி அலுவலர் பணியில் இருக்கும் போது 12.12.2020 அன்று இயற்கை எய்தினார். மறைந்த அரசு ஊழியரின் மனைவி <u>திருமதி. எஸ். மகேஸ்வரி</u> தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு கோரி 28.12.2021 அன்று விண்ணப்பித்துள்ளார்.

எனவே பணிக்காலத்தில் மறைந்த திரு. ப்பி. தமிழ் செல்வன் அவர்களின் மனைவி திருமதி. எஸ். மகேஸ்வரி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரிய விண்ணப்பம் பார்வை 3-ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி பரிசீலனை செய்தபின் அரசுப்பணிகாலத்தில் மறைந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி. எஸ். மகேஸ்வரி என்பவர் இளநிலை உதவியாளர் பதவிக்கு கருணை அடிப்படையில் தகுதி பெற்றுள்ளதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணி நிபந்தனைகள் சட்டம் 2016 விதி 17 (1) இன் படி அவருக்கு Level-8 (Rs. 19500- 71900) என்ற ஊதிய ஏற்றமுடைய இளநிலை உதவியாளர் பதவியில் தற்காலிகமாக கோவை (மகளிர்) அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

இவ்வாணை கிடைக்க பெற்ற பத்து தினங்களுக்குள் முதல்வர் முன்னிலையில் உதவி சிவில் சர்ஜின் அந்தஸ்துக்கு குறைவுபடாத மருத்துவ அதிகாரியிடமிருந்து உடற்தகுதிச் சான்றிதழ் பெற்று அதனுடன் பணியில் சேர வேண்டும்.

இவர் பணியில் சேர்ந்து கொள்ள எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.

இவர் அளித்துள்ள அசல் சான்றிதழ்களோ, இதர விவரங்களோ தவறு என்று பின்னர் அறியும் பட்சத்தில் இவர் உடனடியாக எவ்வித முன்னறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்யப்படுவார் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

5/2/24

கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி)

பெறுநர்

திருமதி. எஸ். மகேஸ்வரி,
க/பெ.ப்பி. தமிழ்செல்வன்(மறைவு)
க.எண்.50/25, பெரிய தோட்டம் காலனி,
வீரகேரளம், கோயம்புத்தூர்-07.

6/2/24

நகல் 1. முதல்வர்
அரசு தொழிற் பயிற்சி நிலையம்
(மகளிர்), கோவை.

கீழ்க்கண்ட அசல் சான்றிதழ்களுடன்

பத்தாம் வகுப்பு சான்றிதழ் எண்.1527619, 1654096
12 வது வகுப்பு சான்றிதழ் எண்.0831733, 1182566
மாற்றுச்சான்றிதழ் எண்.0151000395
சாதிச்சான்றிதழ் எண்.918777
பட்டப் படிப்பு சான்றிதழ் எண்.06N04T02160
Course completion certificate.015M12007S51100

முதல்வர் அவர்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படும் மேற்கண்ட அசல் சான்றிதழ்களை பெற்று கொண்டதற்கான ஏற்பளிப்பினை அளித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

தனியார் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்திருப்பின் அதனை பெற்று உரிய வேலைவாய்ப்பகத்திற்கு விவரம் தெரிவித்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. முதல்வர்
அரசு தொழிற்பயிற்சி நிலையம்
ஆனைக்கட்டி.
} தகவலுக்காக

3. மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகம், கோயம்புத்தூர்
4. ஆணையர் அவர்களின் நேர்முக எழுத்தர்
கூடுதல் இயக்குநர் (கைப) நேர்முக எழுத்தர்
5. இருப்புக்கோப்பு உபரி.